செ.வெ.எண்.180/2009(செமதொஅ) நாள் : 23.06.2009.

**அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூரில் கட்டப்பட்டு வரும் பெரியார் நினைவு சமத்துவபுரம் வீடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்**

காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூரில் புதியதாக கட்டப்பட்டு வரும் பெரியார் நினைவு சமத்துவபுர வீடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆத்தூர் ஊராட்சியில் பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு தலா ரூ.1.63 லட்சம் வீதம் 100 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. கட்டப்பட்டு வரும் வீடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகள் எந்த அளவிற்கு முடிக்கப்பட்டுள்ளது என்பதை கேட்டறிந்தார். அங்கு நிழல் தரும் மரக்கன்றுகளை நட்டார். மேலும், தென்னை, பூங்கன், வேம்பு போன்ற மரக்கன்றுகளை நட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். கட்டி முடிக்கப்பட வேண்டிய வீடுகள் மற்றும் சாலைப் பணிகளை விரைவாக முடிக்குமாறு பொறியாளரை கேட்டுக் கொண்டார்.

பின்னர், இலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அடையாள சேரி ஊராட்சியில் பெரியார் நினைவு சமத்துவபுர வீடுகள் கட்டுவதற்கான இடம் 11.10 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வு செய்யும் நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.இரா.அனந்தகுமார் இ.ஆ.ப., மதுராந்தகம் வருவாய் அலுவலர் திரு.சோமுபாண்டியன், மதுராந்தகம் வட்டாட்சியர் திரு.சுரேந்தர், செய்யூர் வட்டாட்சியர் திரு.பூ.சுப்ரமணியன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.மாணிக்கம், திரு.சுப்ரமணியம் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியிடுபவர்,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்.**